ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2135/19 - 2019 අගෝස්තු මස 05 වැනි සඳුදා - 2019.08.05

*2135/19 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 05 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 6/ 2017*

**2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சிவில் விமான சேவைகள் சட்டம்**

6 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சிவில் விமான சேவைகள் சட்டத்தின் 6 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் கலந்தாலோசனையுடன் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க ஆகிய நான், சிவில் விமான சேவை அதிகார சபையின் அமைச்சரினால் ஆக்கப்பட்டதும் 2016, யூலை 1 ஆந் திகதிய 1973/77 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையால் திருத்தப்பட்டவாறான 2013, பெப்புருவரி 15 ஆந் திகதிய 1797/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையின் II ஆம் அட்டவணையை அதன் I ஆம் பந்தியினை நீக்குவதன் மூலமும் அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும் இக்கட்டளையால் திருத்துகின்றேன்.

"1. பின்வருவனவற்றின் அபிவிருத்தியும், தொழிற்பாடும் மற்றும் பேணுகையும்-

(i) மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கொழும்பு ;
(ii) தென் மாகாணத்தில் அமைந்துள்ள மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் ;
(iii) மேல் மாகாணத்தில் அமைந்துள்ள கொழும்பு விமான நிலையம், இரத்மலானை ;
(iv) கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள மட்டக்களப்பு விமான நிலையம் ; அத்துடன்
(v) வட மாகாணத்தில் அமைந்துள்ள பலாலி விமான நிலையம்.".

அர்ஜுன ரணதுங்க,
போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்.

பத்தரமுல்ல,
2019, ஓகத்து 05.

08-745

1A - PG 4607 — 517 (2019/08) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*